**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2214/ஆ5/2024, நாள்.11.07.2024**

பொருள் பள்ளிக் கல்வி – மத்திய அரசின் திட்டமான பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் (BBBP – Beti Bacho Beti Padhao) திட்டம் குறித்து – பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி, திறன் மேம்பாடு, பாதுகாப்பு, சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தினை உருவாக்கும் பொருட்டு – 18.07.2024, 19.07.2024 மற்றும் 20.07.2024 ஆகிய நாட்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுதல் – பள்ளியில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவியர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட சமூகநல அலுவலரின் கடித ந.க.எண்.1141/அ/2022, நாள். 09/07/2024

•••••

பார்வையில் காணும் கடிதத்தில், மத்திய அரசின் திட்டமான "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" (Beti Bacho Beti Padhao) திட்டமானது பெண்கள் மற்றும் குழந்தைகள் சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தில் வைக்கவும் அவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்திடவும், கல்வி அளித்தல், திறன்களை வளர்த்தல், பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தினை அதிகரித்தல் மற்றும் பெண்குழந்தை கருக்கலைப்பு அல்லது பெண் சிசுக்கொலைகளை தடுத்தல் போன்றவற்றினை செயல்படுத்திட "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" (Beti Bacho Beti Padhao) என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி கீழ்க்காணும் அட்டவணைப்படி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிகழ்ச்சியின் பெயர் | நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ளும் ஒன்றியங்கள் | நிகழ்ச்சி நடைபெறும் இடம் | நிகழ்ச்சி நடைபெறும் நாள் மற்றும் நேரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | Career Counseling Activitives (Motivation Programm) | வேலூர் புறநகர், வேலூர் நகர், அணைக்கட்டு மற்றும் கணியம்பாடி | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர். | 18.07.2024 (வியாழக்கிழமை) காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை | 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்கள் ( ஒரு பள்ளிக்கு 15 மாணவிகள் கலந்துக் கொள்ள வேண்டும்) |
| | | குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு | திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம் | 19.07.2024 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை | 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்கள் ( ஒரு பள்ளிக்கு 15 மாணவிகள் கலந்துக் கொள்ள வேண்டும்) |
| | | காட்பாடி மற்றும் கே.வி. குப்பம் | அரசு (பெ) மேல்நிலைப் ள்ளி, காட்பாடி | 20.07.2024 (சனிக்கிழமை) காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை | 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்கள் ( ஒரு பள்ளிக்கு 15 மாணவிகள் கலந்துக் கொள்ள வேண்டும்) |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் பெண் பிள்ளைகள் மேற்காண் நடைபெறும் நிகழ்ச்சியில் தவறாமல் பொறுப்பாசிரியர் ஒருவருடன் கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு – நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும் )

12/7/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

12-07-24

பெறுநர்
தலைமையாசிரியர்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட சமூகநல அலுவலர்,
   மாவட்ட சமூகநல அலுவலகம்,
   வேலூர் மாவட்டம் – 9.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. பள்ளித் துணை ஆய்வாளர்,
   முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம்.
4. பள்ளித் துணை ஆய்வாளர்,
   மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை கல்வி), வேலூர் மாவட்டம்
   மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)) மூலமாக
5. தலைமையாசிரியர்கள்,
   ஸ்ரீ வெங்டேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   அரசு (பெ) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி
   திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம்.
   (நிகழ்ச்சிகள் நடைபெற போதுமான வசதிகள் செய்து தர தெரிவிக்கப்படுகிறது.)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)